

சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட, கல்பகனூரியில் நேற்று (05.02.2025) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி–கஸ்தூரிபாநகர் பகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு இலவச வீட்டு மனை வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அரசு அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் சார் ஆட்சியர் செல்வி. சங்கீதா உட்பட அரசுத்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிராக

# போச்சம்பள்ளியில் கண்டன பொதுக்கூட்டம்! பி.வில்சன் எம்.பி. - வி.பி.கலைராஜன் சிறப்புரை!

## தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது!

கிருஷ்ணகிரி, பிப். 7-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படியும், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும், எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது. ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என நிதி நிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து நாளை (08.02.2025 - சனிக்கிழமை), மாலை 5 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பர்கூர் சட்டமன்ற தொகுதி, போச்சம்பள்ளி பேருந்து நிலையம் அருகே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் "கண்டன பொதுக்கூட்டம்" நடைபெற உள்ளது.

இந்த பொதுக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக தலைமை சட்ட ஆலோசகர், கழக மூத்த வழக்கறிஞர், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன், திராவிட முன்னேற்றக் கழக இலக்கிய அணி மாநில செயலாளர் வி. பி. கலைராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் உள்ளிட்ட நிர்வாகிகள், BLA 2, BLC, கிளைக் கழக செயலாளர்கள், கழகத் தோழர் தோழர்கள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

### தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில்

# தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கோவி.செழியன் – சு.கல்யாணசுந்தரம் எம்.பி. – திருப்பூர் மனோகர் பாபு கண்டன உரை!

### மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் பிப்.7-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சை மத்திய மாவட்டம் சார்பில் நாளை (08.02.2025) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை



வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிடுள்ள அறிக்கை வருமாறு : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த ஒன்றிய மோடி அரசுக்கு எதிராக தஞ்சாவூர் பனகல் கட்டடம் அருகில், நாளை (08.02.2025-சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி, திருப்பூர் மனோகர் பாபு ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.

அதுசமயம் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட 28 வது வார்டு காந்திநகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் புதிய ஸ்மார்ட் வகுப்பறையினை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா தலைமையில் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினரும் மாமன்ற உறுப்பினருமான இராசு.சந்தோஷ் திறந்து வைத்தார். நிகழ்வில் மாநகர துணை மேயர் மு. லியாகத் அலி . மாமன்ற உறுப்பினர் பால்ராஜ் . மாநகர திமுக துணைச் செயலாளர் மா.மணி வேலன். மாவட்ட தி.மு.க. பிரதிநிதி, புதுக்கோட்டை கிறிஸ்துவ நல்லெண்ண இயக்க மாவட்ட செயலாளர் ஆ. ஜேம்ஸ், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ரெ.மு. தர்மராஜ். மாவட்ட தி.மு.க இலக்கிய அணி துணைத் தலைவர் கவிஞர் ஆ.மரிய எட்வின், ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் டி. அப்பு காளை, வட்டக் கழக செயலாளர்கள் சி.மாரியப்பன், ஜே. ரவிச்சந்திரன் அ. தியாகு மற்றும் கா. ராமு. எஸ். மருதமுத்து. ஐ. ஜூலி ராஜ், ஏ.ஹென்றி, திருமாறன் ட்ராவல்ஸ் குமார், கிளாசிக் ராபர்ட், லூ. ஜான் குமார், எம். மணிமாறன், அந்தோணி சூசை, சதீஷ் ராசப்பன் மற்றும் ஆசிரிய பெருமக்கள் மாணவ மாணவிகள் பலரும் கலந்து கொண்டனர்.



கூத்தாநல்லூர் மேலக்கடை வீதியில் நகரக் கழகம் சார்பில் நகரச் செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி தலைமையில் திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் தெருமுனைப் பிரச்சாரத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் மன்னை சோம.இளங்கோவன், இளம் பேச்சாளர் செல்வி.விக்னேஷ்வரி, துணை அமைப்பாளர் ஜாகீர் உசேன், தங்க.குணசேகரன், பாலமுத்து ஆகியோர் உரையாற்றினர். உடன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எஸ்.வி.பி.செந்தில் மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் பக்கிரிசெல்வம், புரோஜிதீன், தேவா, இளைஞர் அணி நகர அமைப்பாளர் ரசின் பைசில் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### கோவை மேற்கு தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ.

## ப.கோபாலவின் புதல்வர் ப.கோ.குமார் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



கோவை, பிப்.7-

கோவை மேற்கு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.கோபால் அவர்களின் மகனும், தலைமைக் கழக சொற்பொழிவாளரும், கோவை கோனியம்மன் கோவில் அறங்காவலர் குழு தலைவருமான கோவை ப.கோ.குமார் 27.01.2025 அன்று இரவு 11.00 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம்பெயர நாடுகள் உதவ வேண்டும்!

## ஐக்கிய நாடுகள் மன்றத்தில் – விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கோரிக்கை!

பேங்காங், பிப். 7-

புலம்பெயர்வு குறித்த ஐக்கிய நாடுகள் மன்றத்தின் சர்வதேச ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் கலந்தாய்வுக் கூட்டம் ஐக்கிய நாடுகள் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாய்லாந்து தலைநகர் பேங்க்காங்கில் பிப்ரவரி 3ஆம் தேதி முதல் 6ஆம் தேதி வரை ஐக்கிய நாடுகள் மன்ற அலுவலகத்தில் இந்த கூட்டம் நடைபெற்று வருகிறது. ஐக்கிய நாடுகள் மன்ற அழைப்பின் அடிப்படையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் தலைவரும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத் தலைவருமான பொன் குமார் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்.

தொழிலாளர்கள் தரமான வேலை, நல்ல சம்பளம் என்ற நோக்கோடு பல்வேறு நாடுகளுக்கு ஆண்டாண்டு காலமாக வேலைக்கு புலம்பெயர்ந்து சென்று வருகின்றனர். அப்படி புலம்பெயரும் கட்டுமானத் தொழிலாளர் உள்ளிட்ட அமைப்பு சாராத் தொழிலாளர்கள் முகவர்க ளால் ஏமாற்றப்பட்டு, அயல்நாடுகளுக்கு சென்றபின் சொல்லப்பட்ட வேலையோ, உறுதிகொளிக்கப்பட்ட சம்பளமோ கிடைக்காமல் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர். அவருடைய பாஸ்போர்ட் மற்றும் ஆவணங்களை அந்த நாட்டு முதலாளிகளால் பறிமுதல் செய்து கொள்வதால் விரும்பிய நேரத்தில் அவர்களால் தாயகம் திரும்ப முடி யாமல் அவதிப்படுகின்றனர். செய்த வேலைக்கு உரிய சம்பளத்தை முறையாக வழங்காமல் அந்த நாட்டு முதலாளிகளால் ஏமாற்றப் பட்டு தொழிலாளிகளின் சம்பளம் திருடப்படுகிறது. சுற்றுலா விசாவில் அனுப்பி வைக்கப்பட்டவர்களும், அந்த நாட்டின் சட்ட திட்டங்கள் அறியாத காரணத்தினாலும் பல தொழிலாளர்கள் சிறைப்பட வேண்டிய கொடுமைகள் நடைபெற்று வருகின்றன.



**தமிழ்நாடு அரசு அயலக தமிழர்களுக்கு பாதுகாப்பு!**

இப்படிப்பட்டத் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு தமிழ்நாடு அரசு அயலகத் தமிழருக்கு என ஒரு தனித் துறையை உருவாக்கி இப்படி வெளிநாட்டில் உள்ள தமிழர்களை பாதுகாப்பதற்காக ஒரு வாரியத்தை அமைத்து பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. குறிப்பாக, பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களுக்கு சட்ட உதவி வழங்குதல், இறந்து போனத் தொழிலாளர்களின் உடல்களை மீட்டுத் தருதல், பிள்ளைகளின் திருமணம் மற்றும் கல்விக்கு உதவுதல், இறந்துப் போனத் தொழிலாளியின் குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் காப்பீட்டு தொகை வழங்குதல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இதே போல தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளும் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லும் நாடுகளும் இப்படி புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு ஏற்பாட்டை செய்திட வேண்டும். குறிப்பாக, தொழிலா ளர்கள் அயல் நாடுகளுக்கு சென்று அந்த நாட்டின் வளர்ச்சிக்காக தன்னுடைய ரத்தத்தை வியர்வையாக சிந்தி உழைத்து அந்த நாட்டை மேம்படுத்துகின்றனர். எனவே அந்த நாட்டுக்கும் புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டிய கடமை அந்த நாட்டுக்கு இருக்கிறது. அது போல வெளிநாடுகளில் வேலை செய்து தாய் நாட்டிற்கு அனுப்பும் பணம் அந்நிய செலாவணியாக தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகிறது. இப்படி தொழிலாளர்களின் பணத்தை பெறுவதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 10 லட்சத்து 700 கோடி ரூபாய் அந்நிய செலாவணியாக இந்திய அரசு பெற்றுள்ளது. ஆனால் இந்திய அரசு இப்படிப்பட்ட வெளிநாடுகளில் பாதிக்கும் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்திடவில்லை என்பது வருத்தமான செய்தி ஆகும்.

**தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்!**

1983 ஆம் ஆண்டு புலம்பெயர் சட்டத்தை சப் ஏஜெண்டுகளையும் உள்ளடக்கியதாக அயல்நாடுகளில் உள்ளத் தொழிலாளர்களை பாதுகாப்பதாகவும், புதிய சட்டத்தை கொண்டு வர வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தியும் இந்திய அரசு கண்டு கொள்ளவில்லை என்பது வேதனையான ஒன்று. தொழிலாளர்கள் செலவில்லாமல் அயல்நாடுகளுக்கு புலம்பெயர ஏற்பாடு செய்திட வேண்டும். அதற்கான கட்டணத்தை அந்த நாட்டு முதலாளிகள் செலுத்த வேண்டும். தொழிலாளர்களை ஏமாற்றும் ஏஜெண்டுகளை கடுமையாக தண்டித்திட வேண்டும். புலம்பெ யரும் தொழிலாளர்கள் அந்த நாட்டின் சமூக நலத்திட்டங்களின் பயன்களை பெற்றிட வேண்டும். உள்நாடு மற்றும் வெளிநாடு தொழிலாளர்கள் என பாகுபாடு காட்டக் கூடாது. ஆண், பெண், மதம், மொழி, இனம், நிறம் என்ற எந்த வேறுபாடுகளையும் காட்டக்கூடாது. தொழிலாளர்கள் பாதுகாப்பாகவும், முறையாகவும் அயல்நாடுகளுக்கு புலம்பெயர்வ தற்கான ஏற்பாடுகளை செய்து விட வேண்டும்.

**ஐக்கிய நாடுகள் முன்வர வேண்டும்!**

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் கடும் மழை, வெள்ளப்பெருக்கு, மண் சரிவு, கடல் நீர்மட்டம் உயர்வு, அளவு கடந்த வெப்பநிலை உயர்வு போன்றவற்றால் சாமானியத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதும் பிழைப்புக்காக புலம்பெயர்வதும் தற்போது அதிக அளவில் ஏற்பட்டு வருகிறது. இப்படிப்பட்டத் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு அரசுகள் பொது நிதியை ஒதுக்கிட வேண்டும். எங்கள் தமிழ்நாட்டில் வெப்பநிலை உயர்வை ஒரு இயற்கை பேரிடராக தமிழ்நாடு அரசு அறிவித்து அதனால் கடும் வெப்பத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு நிவாரண வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. அதைப்போல அனைத்து நாடுகள் அரசும் பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டும்.

வெளிநாடுகளுக்கு வேலைக்கு சென்ற தொழிலாளர்கள் தங்கள் முதலாளியின் அனுமதியைப் பெற்று தான் தங்களினுடைய முதலாளியை மாற்றிக் கொள்ள முடியும் என்ற கப்பாலா முறையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். புலம்பெயர் வோருக்கான ஐ.நா.வின் விதிகளை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்து அதனை நடைமுறைப்படுத்த முன் வர வேண்டும். அதுபோல ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர் வதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் நடைமுறைப் படுத்திட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு பொன்குமார் உரையாற்றினார்.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் சமூக பொருளாதார ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சியில் புலம்பெயர் வோருக்காக பணியாற்றக்கூடிய தொழிற்சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஆசியா, பசிபிக் சேர்ந்த அனைத்து நாடுகளின் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் இருந்து சுமார் 200 பேர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்தியாவின் சார்பில் வெளிநாடு விவகார துறையின் கூடுதல் செயலாளர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் .

### வன்னிய சமூகத்தினரின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று –

# சமூகநீதிப் போராளிகளுக்கு மணி மண்டபம் அமைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் – வன்னியர் கூட்டமைப்பின் தலைவர் சி.என்.ராமமூர்த்தி– காடுவெட்டி குருவின் மகள் விருதாம்பிகை நேரில் தெரிவித்தனர்!

சென்னை, பிப்.7-

வன்னியர் சமூகத்தினரின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, 21 சமூக நீதி போராளிகளுக்கு மணிமண்டபம் அமைத்துத் தந்த தமிழ்நாடு அரசிற்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன், வன்னியர் கூட்டமைப்பின் தலைவர் சி.என். ராமமூர்த்தி, காடுவெட்டி குருவின் மகள் விருதாம்பிகை மற்றும் மனோஜ் உள்ளிட்டோர் நேற்று காலை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சரை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

வன்னியர் சமூக மக்களுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு கேட்டு 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் உயிர்நீத்த 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்தது. 1989 ஆம் ஆண்டு அமைந்த முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை அமைத்து கொடுத்து, அவர்களுக்கு 20 சதவிகித இடஒதுக்கீட்டினை வழங்கி கல்வியிலும் , வேலை வாய்ப்பிலும் சமவாய்ப்பை ஏற்படுத்தினார். 2021 ஆம் ஆண்டு திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி எண் 110 ன் கீழ், 2.09.2021 அன்று "1987 ஆம் ஆண்டு இடஒதுக்கீடு போராட்டத்தில் காவல் துறையினுடைய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூக நீதி போராளிகளின் தியாகத்தை மதிக்ககூடிய வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும்" என்று கூறினார். அதன் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி கிராமத்தில் , 21 சமூக நீதி போராளிகளுக்கு 5 கோடியே 70 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட மணி மண்டபத்தை கடந்த மாதம் 28 ஆம் தேதி நேரில் சென்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து தியாகிகளுக்கு மரியாதை செலுத்தினார்.

இந்த நிலையில், நேற்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன், வன்னியர் கூட்டமைப்பின் தலைவர் சி.என்.ராமமூர்த்தி, காடுவெட்டி குரு அவர்களின் மகள் விருதாம்பிகை மற்றும் மனோஜ் உள்ளிட்டோர் நேரில் சந்தித்தனர்.

அப்போது, வன்னியர் சமூக மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று 21 சமூக நீதி போராளிகளிக்கு மணி மண்டபம் அமைத்த தமிழ்நாடு அரசிற்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் நன்றி தெரிவித்தனர். இந்த சந்திப்பின் போது, அமைச்சர்கள் துரைமுருகன் மற்றும் பொன்முடி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

முதல்வர் உடனான சந்திப்பிற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன், "வன்னியர் சமூக மக்களின் கோரிக்கையை சட்டமன்றத்தில் நான் பேசியவுடன், நிச்சயம் மணி மண்டபம் கட்டப்படும் என முதல்வர் கூறியிருந்தார். அதற்கு முதல்வரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்துள்ளேன்" என்றார். அதே போல், இலங்கை தமிழர்கள் விவகாரம் மற்றும் சாதிவாரி கணக்கெடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முதல்வரிடத்தில் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த காடுவெட்டி குரு அவர்களின் மகள் விருதாம்பிகை மற்றும் காடுவெட்டி மனோஜ், இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர்நீத்த 21 தியாகிகளுக்கு மணி மண்டபம் கட்டித் திறந்த முதலமைச்சருக்கு நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தோம் என கூறினர்.

மேலும், வன்னியர் சமூகம் சார்ந்த பல கோரிக்கைகளை முதலமைச்சரிடம் வைத்திருப்பதாகவும் அதை நிறைவேற்றி தருவதாக முதல்வர் கூறியுள்ளார் என்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். மறைந்த காடுவெட்டி குருவுடைய பிறந்தநாள் விழாவிற்கு அனுமதி கேட்ட நிலையில், அரசும் அனுமதி அளித்திருந்தது. அதே போல் காடுவெட்டி குரு அவர்களுக்கு வெண்கல சிலை அமைக்க அனுமதி கேட்டிருந்த நிலையில் அரசு அனுமதி கொடுத்துள்ளது. இந்த இரண்டு நிகழ்வுக்கும் தமிழ்நாடு அரசிற்கும் முதலவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தோம் என தெரிவித்தனர்.

வன்னியர் கூட்டமைப்பின் தலைவர் சி.என்.ராமமூர்த்தி அவர்களும் செய்தியாளர்களை சந்திக்கும் போது, வன்னியர் இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் நீத்த 21 பேருக்கு மணிமண்டபம் அமைத்த தந்த முதலமைச்சருக்கு நன்றி என கூறினார்.